# கழுகின் சத்தம்

## டிசம்பர் 11, 2023

1



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

# உன்னை சோதிக்க அவர் பிசாசானவனை கட்டவிழ்த்து விடுகிறார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 59-11-08 பகைஞனுடைய வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்ளுதல்

தேவன் சபையினுள் சோதனைகளைக் கொண்டு வருகிறார்.

ஏனெனில் தேவனிடம் வரும் ஒவ்வொரு புத்திரனும் சோதிக்கப்பட்டு, பரீட்சிக்கப்பட்டு, நிரூபிக்கப்படவேண்டும்.

வியாதி உன்னை அணுக அவர் அனுமதிக்கிறார்.

உன்னை சோதித்து நிரூபித்து நீ ஆபிரகாமின் வித்து என்பதைக் காண் பிக்கவே வியாதி உன்மேல் வர அவர் அனுமதிக்கிறார்.

அவர் தம்முடைய சொந்த சித்தத்தினால் அப்படிச் செய்கிறார்.

அவர் ஆபத்துக்கள் வர அனுமதிக்கிறார், உன் நண்பன் உனக்கு விரோதமாய் எழும்ப அவர் அனுமதிக்கிறார். இவை அனைத்தையும் அவர் அனுமதிக்கிறார்.

உன்னை சோதிக்க அவர் பிசாசானவனை கட்டவிழ்த்து விடுகிறார். உன் உயிரை எடுத்துக் கொள்வதைத் தவிர மற்றெல்லாவற்றையும் அவன் செய்கிறான்.

உன்னைத் துன்பம் என்னும் படுக்கையின் மீது எரிய உன் அயலாரை உனக்கெதிராக அவன் எழும்ப பண்ண முடியும். சபையும் உனக்கு விரோதமாய் எழும்ப அவன் கிரியை செய்ய முடியும். அவன் எதையும் செய்ய முடியும். ஆனால்

அப்படி அவன் செய்வது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அத்தகைய சோதனை பசும்பொன்னிலும் விலையேறப்பெற்றது என்று நாம் போதிக்கப்பட்டுள்ளோம்.

33. வாக்குத்தத்தம் பெற்றவனும், யேகோவாவை விசுவாசித்தவனும், அவரை அறிந்து விசுவாசத்தில் உண்மை யாயிருந்தவனுமான ஆபிரகாமுக்கு அவன் ஈசாக்குடன் சென்றபோது, அந்த மலையின் மேல் என்ன நடந்தது? அவ னுக்கு அங்கு நேர்ந்த அந்த பரீட்சையின் மூலமாகவே அவர் கீழ் நோக்கி, “வித்து வாசலைச் சுதந்தரிக்கும். இவைகளைச் செய்வேன் என்று நான் என் பேரில் ஆணையிட்டேன்” என்றார். ஆணையிட அவரைக் காட்டிலும் பெரியவர் இல்லா ததனால், அவர் தம்பேரில் ஆணையிட் டார். ஆக. அவர் ஆபிரகாமை முடிவுவரை

பரீட்சித்தாரெனில், அவர் முடிவுவரை - நாம் தீர்மானிக்கும் சமயம் வரும் வரை - உன்னையும் என்னையும் பரீட்சித்தே தீருவார். அச்சமயம் எல்லாம் உன்னை விட்டு அகன்றிருக்கும். அங்கே நீ தனியாக நிற்க நேரிடும். அல்லேலூயா! அது உண்மை!

34. தனித்து நில்! வெளியரங்கமாக “அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்” என்று சொல், ஆபிரகாமின் சந்ததி அவ் வாறே கூறும். அவர்தான் அந்த வாக்குத் தத்தத்தைச் செய்கிறவர். மற்றவர்கள் என்ன கூறினாலும் என்ன செய்தாலும் பரவா யில்லை. “நானும் என் வீட்டாருமோ வென்றால், கர்த்தரையே சேவிப்போம்” என்று சொல்! மற்றவர் யாவரும், “அந்த அனுபவமெல்லாம் ஒன்றுமில்லை. அது

உணர்ச்சியேயன்றி வேறொன்றுமில்லை" என்று கூறினாலும், "நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்!" என்று சொல். இங்கே நானும் பவுலுடன் சேர்ந்து "இவர்கள் மதபேதம் என்று சொல்லுகிற மார்க்கத்தின்படியே எங்கள் முன்னோர்களின் தேவனை நான் ஆராதனை செய்கிறேன்" என்று கூற விரும்புகிறேன். அர்த்தமற்று பேசுகிறவர்கள் சபையினுள் புகுந்தாலும், அவர்கள் பேச்சு மாற்றுகிறவர்களாயிருந்தாலும், அவர்களில் எல்லாவிதமான கள்ளத்தீர்க்கதரிசிகள் இருந்தாலும், அயலகத்திலும் சுற்றிலுமுள்ள பலவிதமானவர்கள் சபையில் வந்து ஜனங்களுடன் கலந்தாலும், நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்! எல்லாரும் சபைக்கு வருவதை நிறுத்திக்கொண்டா


லும், சபையானது தணிந்து போய் சிரத்தையற்று இருந்தாலும் நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்! ஒரு சிலருக்காக ஜெபித்து அவர்கள் குணமடையவில்லை என்றாலும் அது என் விசுவாசத்தைக் குறைக்காது. நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்!

35. மனிதர் தவறாதவர்களல்ல. ஆனால் தேவன் தவறாதவர். மனிதனே, நீ ஒரு மனிதன் மேல் உன் நம்பிக்கையை வைத்தால், அவன் தவறிப்போவான். அவன் வேண்டுமென்று அப்படி செய்வ தில்லை, ஆனால் அவன் தவறுகிறான். மனிதன் மேல் நீ வைத்துள்ள விசுவா சத்தை அகற்றவே தேவன் அவனைத் தவறிழைக்க அனுமதிக்கிறார். நம்முடைய விசுவாசம் மனித ஞானத்தில் அல்ல. அது

இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையில் இருக்கிறது. அங்கே தான் ஆபிரகாமின் உண்மையான வித்து அந்த வாக்குத்தத்தத்தில் இளைப்பாறிக் கொண் டிருக்கிறது. பரிசுத்த ஆவியைப் பெற்றால் மாத்திரமே அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாராக முடியும். பரிசுத்த ஆவி பெறாவிடில் அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரல்ல. ஆபிரகாமிலிருந்த அதே விசுவாசம் பரிசுத்த ஆவியின் மூலம் விசுவாசிக்குள் வருகிறது. என்ன நேர்ந்தா லும் அல்லது காரியங்கள் எவ்வளவு விபரீதமாக நடந்தாலும், விசுவாசியான வன் அணிவகுத்து முன் செல்கிறான்.



# ஒரு நாள் காலையில் சபையானது பறந்து சென்று பரலோகத்திலுள்ள தேவனுடைய மார்பை அடையும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-09-09M இறங்கு வரிசையில் எண்ணுதல்

இந்த ஜான் க்ளென் விண்வெளிக்கு செலுத்தப்பட்ட அன்று காலை, எல்லோரும் முகங்குப்புற விழுந்து அழுது ஜெபித்து, அவன் என்ன சாதிக்கப்பட போகிறான் என்று வியந்தனர். கேப்கான வெரால் என்னுமிடத்தில் அந்த பெரிய விண்வெளிக் கப்பல் உயர்த்தப்பட்ட போது, அந்த அணுக்களிலிருந்து தீ பரவத் தொடங்கினது. அது ஆகாயத்தில் அப்படி செல்வதை ஜனங்கள் கண்ட போது, அவர்கள் அழுது புலம்பி, மேலே செல்லும் அவர்களுடைய விண்வெளி வீரனுக்கு என்ன நேரிடுமோ என்று வியந்தனர். ஓ, ஆனால் சபையும் கூட, மகிமை, தீ பரவச் செய்கிறது. ஆமென். இறங்கு வரிசையில்

எண்ணுதல் முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது! ஆமென்! ''நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல், பரிசுத்த ஆவியின் அபிஷேகம், லவோதிக்கேயா சபை காலம். நாம் முடிவுக்கு வந்து விட்டோம்! இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்! காரியம் என்ன? ''பத்து, ஒன்பது, எட்டு, ஏழு, ஆறு, ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு.... பூஜ்யம்!'' அவர்கள் அழுது கொண்டிருக்கமாட்டார்கள். சபையானது இயேசு கிறிஸ்துவுடன் கூட இருக்க விண்வெளி அசைவை உண்டாக்கி ஆகாயத்தில் செல்லும்போது, அவர்கள் ஆர்ப்பரித்துப் பாடி தேவனைத் துதித்துக் கொண்டிருப்பார்கள். ஆமென்.

74. இந்த இயற்கை சாதனையில், அவர்கள் சந்திரனை நோக்கி செல்கின்றனர். ஆனால் ஆவிக்குரிய சாதனையில் நாம்

பரலோகத்தை நோக்கி செல்கிறோம். ஆமென்! இயற்கை விண்வெளி வீரன் தனக்கு சந்திரனில் ஒரு இடத்தை தேடிக் கண்டுபிடிக்க முயல்கிறான். ஆனால் நமக்கோ பரலோகத்தில் ஏற்கனவே ஒரு இடம் உண்டு. “என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. நான் போய் உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின் பின்பு, ஒரு விண் வெளி கப்பலை அனுப்பி உங்களைச் சேர்த்துக் கொள்வேன்.” இறங்கு வரிசை யில் எண்ணுதல் துவங்கிவிட்டது! அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? ஆமென். இறங்கு வரிசையில் எண்ணுதல்! “பத்து, ஒன்பது, எட்டு, ஏழு, ஆறு, ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று, பூஜ்யம்.” தீ பரவத் தொடங்குகிறது, ஊழியம் மகிமையில் முடி சூடப்படுகின்றது. அல்லேலூயா! பழைய ராக்கெட் மேல் நோக்கிச் செல்கிறது.

சந்திரனை நோக்கி அல்ல, மகிமையை நோக்கி. அது மேலே பறக்கிறது, தேவனுடைய அக்கினி பரவுகின்றது. பரிசுத்த ஆவியின் வல்லமை அதை சந்திரன், நட்சத்திரங்கள், இன்னும் மனிதன் இது வரை அடையாத உயரத்துக்கு தூக்கிச் செல்கிறது. ஒரு நாள் காலையில் சபை யானது பறந்து சென்று பரலோகத்திலுள்ள தேவனுடைய மார்பை அடையும். நண்பர்களே, மனிதன் இயற்கையான காரி யங்களைக் கொண்டு தன்னால் முடிந்ததை சாதித்து விட்டான். தேவனோ (நான் இங்கு நிரூபித்தது போன்று) அதை ஆவிக்குரிய காரியத்துக்கு எடுத்துக்காட்டாக வைத்துள் ளார்.

75. நாம் விண்வெளி கப்பலுக்குள் வேகமாக நுழைந்து கொள்வோம். இன் னும் சிறிது காலத்தில் கதவு அடைபடும் இறங்கு வரிசையில் எண்ணுதல் நடந்து

கொண்டிருக்கிறது! விஞ்ஞானம், அதன் எண்ணுதல் மூன்று நிமிடங்கள் என்கிறது. நம்முடைய எண்ணுதல் அதையும் தாண் டியிருக்ககூடும். அது ஒருக்கால் ''ஒன்று'' என்று எண்ணப்பட்டு ''பூஜ்யம்'' என்று எண்ணப்பட ஆயத்தமாயிருக்கும். நாம் உள்ளே வருவோம் இறங்கு வரிசையில் எண்ணுதல் நடந்துகொண்டிருக்கிறது என் பதை விசுவாசிக்கிறீர்களா? நாம் சிறிது நேரம் தலை வணங்குவோம்.

பிதாவே! 'பத்து, ஒன்பது, எட்டு, ஏழு, ஆறு, ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு ...'' தேவனே!

நாடுகள் உடைகின்றன. இஸ்ரவேல் விழித்தெழும்புகிறது.

இவை தீர்க்கதரிசிகள் முன்னுரைத்த அடையாளங்களாம்.

புறஜாதிகளின் நாட்கள் எண்ணப்பட்டுள்ளன, திகில் எங்கும் சூழ்ந்துள்ளது. ஓ, சிதறப்பட்டோரே, உங்கள் சொந்தத்துக்கு திரும்புங்கள்.

"என்ன ஒரு நாள்! சாயங்கால வெளிச்சம் பிரகாசிக்கின்றது. ஓ தேவனே, ஒவ்வொரு அவிசுவாசியும் தன் கல்வி யறிவு கொண்ட கருத்துக்களை, உமது வார்த்தைக்கு முரணாயுள்ள கருத்துக்களை வேகமாக தள்ளிவிட்டு, இன்று காலை இந்த மகிமையான விண்வெளி கப்பலுக்குள் பிரவேசிக்க வேண்டுமென்று ஜெபிக்கிறோம். ஏனெனில் நாங்கள் விண்வெளி வீரரின் ஒருபாகமாக இருக்க, இவருக்குள் பிறந்ததிருக்கிறோம்.

நீங்கள் எந்த பக்கத்தில் இருப்பதாக உரிமை கோரினாலும் எனக்குக் கவலையில்லை. நீங்கள் ஒவ்வொருநாளும் புரியும் செயல்கள் நீங்கள் யாரென்பதை நிரூபிக்கும். “உங்கள் வாழ்க்கை உரக்க சத்தமிடுவதால், உங்கள் சாட்சியை என்னால் கேட்க முடியவில்லை” என்னும் பழமொழியை நீங்கள் கேட்டிருப்பீர்கள். பாருங்கள், உங்கள் செயல்கள் அதிக சத்தமாயுள்ளன.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-07-17 கிறிஸ்துவினால் கட்டப்பட்டவனாயிருக்கிற பவுல்

38. நான் சற்று முன்பு கூறினது போல, உங்கள் வாழ்க்கை நிரூபிக்கும். நீங்கள் எந்த பக்கத்தில் இருப்பதாக உரிமை கோரினாலும் எனக்குக் கவலையில்லை. நீங்கள் ஒவ்வொருநாளும் புரியும் செயல் கள் நீங்கள் யாரென்பதை நிரூபிக்கும். "உங்கள் வாழ்க்கை உரக்க சத்தமிடுவதால், உங்கள் சாட்சியை என்னால் கேட்க முடியவில்லை" என்னும் பழமொழியை நீங்கள் கேட்டிருப்பீர்கள். பாருங்கள், உங்கள் செயல்கள் அதிக சத்தமாயுள்ளன.

39. நான் கூச்சலிடுவதிலும் குதிப்பதி லும் நம்பிக்கை கொண்டவன். ஆனால் "நீங்கள் வாழும் நிலைமையை காட்டிலும்

அதிக உயரம் குதிக்க வேண்டாம். ஏனெனில் உலகம் அதைக் கவனித்துக் கொண்டிருக்கும்" என்று நான் அடிக்கடி கூறுவதுண்டு. பாருங்கள்? நீங்கள் வாழும் நிலைமையின் மட்டத்துக்கு தான் குதிக்க வேண்டும். ஏனெனில் யாராவது ஒருவர் உங்களை கவனித்துக் கொண்டிருப்பார்.

40. நாங்கள் சபைக்கு வராவிட்டால் ...... அநேகர் அதைச் செய்வதில்லை. அவ்விதம் வராதவர்களில் அநேகர் உண்மையானவர்கள். சபையில் அவர்கள் அதிக சீர்கேட்டைக் காண்பதால் அத னோடு அவர்கள் தங்களைக் சம்பந்தப் படுத்திக் கொள்ள விரும்புவதில்லை. நாம் அதைக் குறித்து அநேக முறை பேசி யிருக்கிறோம்; நீங்கள் அவர்களைப் பழிக்க முடியாது (பாருங்கள்?) ஏனெனில் - தங்களைக் கிறிஸ்தவர் என்றழைத்து ஆனால் அவர்கள் செயல்படும் முறைகள்

..... உலகம் பெற்றுள்ள மிகப் பெரிய இடையூறுகள் அவர்களே. அவர்கள் யார்? ..... மனிதரும் ஸ்திரீகளும் தங்களைக் கிறிஸ்தவர் என்றழைத்துக்கொண்டு, அதற்கு மாறாக ஜீவிக்கும் மக்கள். அது முற்றிலும் சரி.

41. நியாயத்தீர்ப்பு நாளில் ஏமாற்றங்கள் வரவிருக்கின்றன.... என்றென்றைக்குமான அக்கினிக்குள் போகும்படியான நியாயத்தீர்ப்பு வாசிக்கப்படுகையில், பாவியோ, கள்ளச் சாராயக்காரறோ, சூதாடியோ, விபச்சாரரோ (பாருங்கள்) அவர்கள் ஏமாற்றமடையப் போவதில்லை. ஆனால் எவனொருவன் ஒரு சபையின் பின் ஒளிந்துக் கொண்டு, தன்னைக் கிறிஸ்தவன் என்று பாசாங்கு செய்கிறானோ அவன் மட்டுமே நியாயத்தீர்ப்பின் நாளிலே ஏமாற்றமடைவான். அவன் தன்னைக் கிறிஸ்தவன் என்று சொல்லியும்,

வேறு வழியில் ஜீவிப்பவன். அவன் இவ்விதம் பாசாங்கு செய்து ஜீவிப்பதைக் காட்டிலும், அவன் அதைத் துவங்கா மலிருந்தால் அதுவே அவனுக்கு மேலனா தாக யிருந்திருக்கும். தான் கிறிஸ்தவன் என்று கூறி வேறு வழியில் ஜீவிப்பவனே, உலகத்திற்கு மகா பெரிய இடையூறா யிருக்கிறான்.

42. உனக்கு அற்புதங்கள் செய்ய எவ்வளவு வல்லமையுள்ளது என்று அளவைக் கொண்டு முடிவு செய்யாதே, வார்த்தையிலுள்ள நம் அறிவின் அளவைக் கொண்டு நாம் நம்மை மதிப்பிடுவதில்லை. ஆனால் எப்பொழுதுமே ..... ஆனால் நீ இப்பொழுது எவ்விதமான ஜீவியகனி யைத் தருகின்றாய் என்பதைக் கணக்கெடுத் துப்பார். பாருங்கள்? நான் சிறிது காலத்திற்கு முன்பு அரிசோனா, பீனிக்ஸ் வர்த்தகக் குழுவின் கூட்டத்தில் பேசி

யதைப்போன்று .... கிறிஸ்துவின் ஜீவியத்திற்கு நாம் பிரதிபலிப்பாயிருக்க வேண்டும்.

43. நான் கென்டக்கியில் பிறந்தேன் என்று கூறியுள்ளேன். நான் சிறுவனா யிருந்தபோது அது பழங்கால ... நான் குறிப்பிட்ட அந்த சிறுவனுக்கு நம்மைப் போன்ற வசிக்கும் வீடு கிடையாது. இன்றைக்குள்ள வீடுகளில் வீட்டு எல்லா இடங்களிலும் நிலைக் கண்ணாடி வைக் கப்பட்டு, அழகுள்ள ஸ்திரீகள் தங்கள் தலைமயிரை அழகு படுத்திக்கொள்கின் றனர். ஆனால் அங்கே ஒரே ஒரு சிறிய கண்ணாடி வெளியே மரத்தில் தொங்க விடப்பட்டிருந்தது. அங்கே தான் அவ னுடைய தாயும் தகப்பனும் தங்கள் தலை மயிரைக் சீவிக் கொள்வார்கள்.

44. வெளிப்படையாகக் கூறினால், அப்படிப்பட்ட வீடுதான் எங்களுக்கும் இருந்தது. நாங்கள் நிலைக்கண்ணாடியில் காண வேண்டுமென்றால், ஒரு பெட்டியைப் போட்டு முகம் கழுவும் இடத்திலிருந்து பலகையின் மேலேறி பார்க்க வேண்டும். அது குப்பையிலிருந்து நான் பொறுக்கின ஒரு உடைந்த நிலைக் கண்ணாடி. அது கென்டக்கியில் அல்ல, நாங்கள் தங்கியிருந்த இந்தியானாவிலுள்ள ஊடிகா பைக் என்னுமிடத்தில்.

45. இந்த சிறுவன் தன் உருவத்தை சரியாக நிலைக்கண்ணாடியில் கண்டதில்லை. அவன் தன் பாட்டியைக் காண நகருக்கு வந்திருந்தான். பாட்டியின் வீட்டிலிருந்த ஒரு அறையில் ஒரு முழு நிலைக் கண்ணாடி கதவில் இணைக்கப் பட்டிருந்தது. சிறுவன் அறைக்குள் ஓடினபோது... அவனுக்கு முன்னால்

வேறொரு சிறுவன் அவனைப் போலவே ஓடுவதைக் கண்டான். இவன் சற்று நேரம் நின்றால் அந்த பையன் என்ன செய்கிறான் என்று பார்க்கலாம் என்று நினைத்தான். இவன் நின்ற போது அவனும் நின்றான். இவன் தலையைத் திருப்பினபோது, அவனும் தலையைத் திருப்பினான். இவன் தலையை சொறிந்தபோது, அவனும் தலையை சொறிந்தான். முடிவில், இது என்னவென்று கண்டுபிடிக்க அவன் அருகில் சென்றான் (அவனுடைய தாயும் பாட்டியும் அவனை அதிசயத்தோடு கவனித்துக் கொண்டிருந்தார்கள்) அவன் திகைப்புற்று, "அம்மா, அது நான்" என்றான்.

46. ஆகவே “நாமும் கூட ஏதோ ஒன்றைப் பிரதிபலிக்கிறோம்” என்று அந்த வர்த்தகர் கூட்டத்தில் கூறினேன். பாருங் கள், நமது வாழ்க்கை பிரதிபலிக்கப்படு

கிறது. நாம் நோவாவின் காலத்தில் வாழ்ந்திருந்தால், யார் பக்கம் இருந்திருப் போம்? நோவா வாழ்ந்த அந்த மகத்தான நாட்களில், நாம் எந்த பக்கம் சேர்ந்திருப் போம்? மோசேயின் நாட்களில், நாம் எந்த பக்கம் சேர்ந்திருப்போம்? தீர்க்கதரிசி யாகிய எலியாவின் நாட்களில், உலகமே நவீனத்தில் விழுங்கப்பட்டு - நவீன யேசபேலைப்போல் தேவனுடைய உண் மையான ஊழியக்காரரை சுழல் காற்றுக் குள் துரத்தி விட்டு, சபையும் ஆசாரி யர்களும் யேசபேலுக்கு தலைவணங்கி யிருந்த காலத்தில் நீங்கள் எந்த பக்கம் இருந்திருப்பீர்கள்? புகழின் பக்கத்தில் சேர்ந்திருப்பீர்களா? அல்லது எலியாவுடன் நின்றிருப்பீர்களா?

47. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவருடைய நாட்களில் ஜனங்களால் வெறுக்கப்பட்டவராயிருந்தார் என்பதை

எண்ணிப்பார்க்கும் போது! அவர் உலகில் கல்வி கற்கவில்லை. அவர் எந்த பள்ளிக்கும் செல்லவில்லை, எந்த வேதா கமக் கல்லூரி அனுபவமும் அவருக்குக் கிடையாது. முறைதவறிப்பிறந்தவர் என் னும் பெயருடன் அவர் வளர்ந்து வந்து, அதன் பிறகு அவர்கள் போதிக்கப்பட்ட வைகளுக்கு மாறான ஒரு சுவிசேஷத்தைப் பிரசங்கத்தார்.

48. அவர் போதகர்களையும் ஸ்தாப னங்களையும் குற்றப்படுத்தினார். தீர்க்க தரிசி என்று தன்னை அழைத்துக் கொள் ளும் அவருடைய பிரசங்கத்தைக் கேட்க செல்பவர் எவரும் ஜெப ஆலயத்திலிருந்து புறம்பே தள்ளப்படுவார்கள் என்னும் அறிக்கையை ஸ்தாபனங்கள் விடுத்தன. அது மரணத்துக்கேதுவான பாவமாக கருதப்பட்டது. அவர்கள் கணக்கு கொடுக்க வேண்டியவர்களாயிருந்தனர். ஆராதனை

செய்ய ஒரு வழி ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தின் கீழ் மாத்திரமே. அவர்கள் இந்த பலியினிடத்தில் வந்தபிறகும், புறம்பே தள்ளப்படுவது எவ்வளவு பயங் கரமான செயல்! ஆனால் அவர் இதை யெல்லாம் அசட்டை செய்தார். அவர் வார்த்தையில் பரிபூரணமாக நிலைத்திருந் தார். ஆயினும் அவர்கள் அறிந்திருந்த முறையில் அல்ல.

49. இயேசுவின் காலத்தில் நீங்கள் யார் பக்கத்தில் இருந்திருப்பீர்கள். பாருங்கள், இப்பொழுது .... இப்பொழுது நீங்கள் வாழ்கின்ற வாழ்க்கை, அக்காலத்தில் நீங்கள் என்ன செய்திருப்பீர்கள் என்பதை பிரதிபலிக்கிறது. ஏனெனில் இப்பொழுது நீங்கள் அதே ஆவியைக் கொண்டவர்க ளாக இருக்கிறீர்கள். இப்பொழுது யார் பக்கத்தில் இருக்கிறீர்களோ, அதே பக்கத் தில் அப்பொழுதும் இருந்திருப்பீர்கள்.

ஏனெனில் இப்பொழுது உங்களுக்குள் இருக்கும் அதே ஆவிதான் அன்று ஜனங்களுக்குள் இருந்தது.

50. பாருங்கள், பிசாசு தன் ஆவியை எடுத்துக்கொள்வதில்லை. அது ஒரு மனிதனிலிருந்து வேறொரு மனிதனுக்குள் செல்கிறது. தேவனும் தமது ஆவியை எடுத்துக் கொள்வதில்லை. அது ஒரு மனிதனிலிருந்து வேறொரு மனிதனுக்குள் செல்கிறது. எனவே எலியாவின் மேலிருந்த அதே ஆவி எலிசாவின் மேல் வந்தது. அது யோவான் ஸ்நானனின் மேல் வந்து தொடர்ச்சியாக வந்து கொண்டிருக் கிறது. கிறிஸ்துவின் மேலிருந்த பரிசுத்த ஆவி சீஷர்களின் மேல் வந்து, இப்படி வழிவழியாக, இப்பொழுதும் ஜனங்களின் மேல் தங்கியுள்ளது. பாருங்கள், தேவன் தமது ஆவியை எடுத்துக் கொள்வதில்லை.



# எனக்கு அது முழுவதுமே ஆவியில் ஏவப்பட்டதாகும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 64-06-21 வழக்கு விசாரணை

9. தேவன் பூமியின் மேல் நியாயத் தீர்ப்பைக் கொண்டு வரவேண்டும். தேவன் இங்கு ஏதோ ஒன்றை, ஒரு நியமத்தை உடையவராயிருந்து, அதைக் கொண்டே உலகத்தை நியாயந்தீர்க்க, தேவனுக்குள் உலகத்தை நியாயந்தீர்க்க வேண்டியவராய் இருக்கிறார், இல்லையென்றால் அது அநீதியானதாய் இருக்கும். உலகமோ நியாயந்தீர்க்கும்படியான எந்த நியமத் தையுமே அறிந்திருக்கவில்லை. அது உண்மையென்று எத்தனை பேர் நம்பு கிறீர்கள்? சபையானது நிலையானதாய் உள்ளதென்றால், அது எந்த ஒன்று? வார்த்தை, தேவன் இயேசுவைக் கொண்டு உலகத்தை நியாயந்தீர்ப்பதாகக் கூறினார். அவர் வார்த்தையாய் இருக்கிறார். "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த

வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி, நமக்குள்ளே வாசம் பண்ணினார்,'' "நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்.''

10. இப்பொழுது நான் இந்த பிற்பகலில் உங்களிடத்தில் ஒரு விநோ தமான பொருளின் பேரில் பேச விரும்பு கிறேன். அது உங்களுக்கு விநோதமாய் இருக்கலாம். ஆனால் நான் இந்தப் பொருளில் நம்முடைய ஆண்டவருக்கு ஒரு-ஒரு விசாரணையை வழங்கப் போகிறேன். அவர் பிலாத்துவினுடைய நீதிமன்றத்தில் சரியான விதமான ஒரு விசாரணையை உடையவராயிருந்தார் என்று நான் கருதவில்லை. அவருக்கு - அவருக்கு சரியான வழக்கு விசாரணை இருந்தது என்று நான் - நான் நம்பவில்லை. ஆகையால் அவர்கள் அவரிடத்தில் குற்றம் கண்டுபிடித்து, அவரை ஆக்கினைக்குட் படுத்தி, அவரை சிலுவையில் அறைந்

தனர். ஆனால் இந்த பிற்பகலில் இது வழக்கு விசாரணையாய் உள்ளபடியால், நாம் நடிக்கப் போகிறோம்.

நீங்களோ, ''நீர் அவருக்கு ஒரு விசாரணையை கொடுக்கக்கூடுமோ?'' என்கிறீர்கள்.

11. அவர் இன்னமும் வார்த்தையாய் இருந்தால், நாம் அவருக்கு அந்த வழக்கை அளிக்க முடியும், ஏனென்றால் அவர் இன்னமும் வார்த்தையாய் இருக்கிறார். நாம் அவருக்கு ஒரு வழக்கு விசாரணையை வழங்க முடியும். நாம் இந்த கட்டிடத்தை நீதிமன்றமாக உருப்படுத்திக் காட்டுகின்றபடியால், இந்த பிற்பகலில் நாம் அதை இந்த நீதிமன்றத் திலேயே காண விரும்புகிறோம். அதாவது அவர் ஒரு விசாரணையை, அதாவது அதை அவருக்கானதாகவோ, அல்லது அவருக்கு எதிரானதாகவோ பெற்றுக் கொள்கிறதை நாம் காண விரும்புகிறோம். நாம் இரண்டு

தரப்பிலுமே வாய்ப்பளிக்க விரும்புகி றோம். ஆகையால் இந்த வழக்கில் நான் வார்த்தையாயிருக்கின்ற அவரை சோதித் துப்பார்க்க விரும்புகிறேன்.

12. இப்பொழுது நான் வாசித்துள்ள இந்த வேத வாக்கியத்தை, மாற்கு 16-ம் அதிகாரத்தை, பண்டிதர் ஸ்கோபீல்டும் கூட இங்கே, "பண்டைய இரண்டு மூல பிரதி களிலுமே 9-ம் வசனத்திலிருந்து காணப் படவில்லை" என்று கூறுகிறார். அது பொது வாக, ஜனங்களுக்குள்ளே விசுவாசிக்கப் படுகின்றது. அதாவது நம்முடைய போதகர்களும் இன்றைக்கு அதை அந்த விதமாகவே விசுவாசிக்க விரும்புகின் றனர். அது அங்கு வாடிகனால் உட்புகுத் தப்பட்டுள்ளது.

13. ஆனால் இரேனியஸ் மற்றும் பண்டைய எழுத்தாளர்கள் அநேகரால் மாற்கு 16 குறிப்பிடப்படுகிறதை நான் கண்டறிகிறேன். சரித்திரத்தை ஆய்ந்து

படிக்கின்ற மற்ற ஜனங்களாகிய நீங்களும் வேதாகம சரித்திரத்தில் அவைகள் ஆதி அப்போஸ்தலர்கள் காலத்தில் இருந்தது என்பதை அறிவீர்கள். இயேசுவினுடைய மரணத்திற்கு பிறகும்கூட பாலிகார்ப், இரேனியஸ், பரிசுத்த மார்டின், பரிசுத்த கொலம்பா மற்றும் அவர்கள் அனைவருமே இந்த மாற்கு 16-ஐ குறிப்பிட்டுக் கூறியிருந்தனர். எனவே அது அதிகாரப் பூர்வமானதாய் இருந்திருக்க வேண்டும். இல்லையென்றால் அவர்கள் அதனை ஒருபோதும் குறிப்பிட்டிருந்திருக்கவே மாட்டார்கள். சரித்திரத்தின்படி பரிசுத்த யோவானே நிருபங்களை ஒன்று சேர்த்து வகுப்பமைவுற்ற முழுத்தொகுதியாக்கினார். பாலிகார்ப் அவருக்கு ஒரு நெருங்கிய நண்பனாய் இருந்து அதைச் செய்ய உதவினார்.

14. இப்பொழுது இன்றைக்கு அவர்கள் அதை விசுவாசிக்கிறதில்லை என்பதை நாம் கண்டறிகிறோம். அவர்கள் உண்

மையாயிருக்கின்ற தேவனுடைய உண்மை நிலையிலிருந்து விலகிச் செல்ல முயன்று கொண்டு, அதற்குப் பதிலாக ஒரு உறுதிமொழியை அல்லது ஒரு கோட்பாட்டை பெற்றுக் கொள்கிறார்கள். உண்மையான தேவன், இந்த அதிகாரத்தில் அது இருக்க வேண்டும் என்பதையும், அவர்களுக்கு வேண்டியதாயிருக்கக்கூடிய ஒவ்வொரு நிரூபணத்தையும் நிரூபிப்பார்.

15. சூடான் ஊழியக் குழுக்களின் தலைவர் பாரிஸ் ரீட்ஹெட் (Reedheed) ஒரு குறிப்பிடத்தக்க பெரிய போதகரைப் போன்றுள்ளவர். அவர் என்னுடைய இடத்திற்கு வந்தபோது, என்னுடைய மனைவி அப்பொழுது அங்கிருந்தாள். அவர், "சகோதரன் பிரன்ஹாம், நீ ஒரு பாப்டிஸ்டாய் இருந்தீர் என்பதை நான் புரிந்து கொண்டேன்" என்றார்.

நான், "ஆம் ஐயா, அது உண்மை” என்றேன்.

16. அவர், “நல்லது” என்று கூறி, “நான் உங்களிடத்தில் ஒரு காரியத்தை கேட்க விரும்புகிறேன்" என்றார். அவர், “நான் ஒரு சிறு பையனாய் இருந்தபோது, எனக்கு ஒரு அனுபவம் உண்டாயிருந்தது. என்னு டைய தாயார் என்னைப் பள்ளிக்கு அனுப்ப கழுவி மற்றும் ஒவ்வொன்றையும் செய்தாள் அப்பொழுது நான் என்னுடைய இளங்கலை பட்டத்தைப் பெற்றபோது, நான் நிச்சயமாகவே கிறிஸ்துவை கண் டடைவேன் என்று எண்ணினேன்” என்றார். அவர், “அது, அது எனக்கு வழங்கப்பட்ட போது, நான் அதை கண்டடையவில்லை. நான் என்னுடைய வேத பாண்டியத்திய பட்டத்தைப் பெற்றபோது, நான் அதைக் கண்டடைவேன் என்று நினைத்தேன். நான் என்னுடைய L.L.D. பட்டத்தைப் பெற்ற போது, நான் அதைக் கண்டடைவேன் என்று நினைத்தேன்" என்றார். அவர், "சகோதரன் பிரன்ஹாம், நான் போதுமான பட்டங்களை, முறையான வேதபாட

பட்டங்களையும், உயர் மதிப்பு வாய்ந்த பட்டங்களையும், அதாவது அவைகளை உங்களுடைய சுவற்றில் ஒட்டக்கூடிய அளவிற்கு பெற்றுவிட்டேன். ஆனால் "வேதாகமத்தின் தேவன் எங்கே?'' என்று கேட்டார். அவர், ''போதகர்கள் தவறான வர்களாக இருந்தனரா?'' என்று கேட்டார்.

அதற்கு நான், “போதகர்கள் தவறான வர்கள் என்று கூறுவதற்கு நான் யார்?'' என்றேன்.

17. அவர், "நல்லது இதனால்தான் நீர் பெந்தெகோஸ்தேயினரிடத்திற்கு திரும்பி விட்டீர் என்பதை நான் புரிந்து கொண் டேன்'' என்றார்.

18. நான், "நல்லது, நான் அப்படி கூறவில்லை....... நான் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிறந்த பொழுதே, நான் தானாகவே பெந்தேகொஸ்தேவாக இருந் தேன் என்று நம்புகிறேன்'' என்றேன். நான், "காரணம் பெந்தெகோஸ்தே ஒரு ஸ்தா

பனம் அல்ல. அவர்கள் அதை அவ்வித மாக்க முயற்சித்துள்ளனர். ஆனால் அது அதுவல்ல. தேவன் ஒரு பிரஸ்பிடேரி யனை, லூத்தரனை அல்லது நீங்கள் யாராயிருந்தாலும் நிரப்புவார். பாருங்கள், எனவே அது ஒரு ஸ்தாபனமாயில்லாமல் அனுபவமாய் இருக்கிறது. நீங்கள் அதை ஸ்தாபனமாக்க முடியாது. அது ஒரு அனுபவம்" என்றேன்.

19. அவர், "நல்லது, என்ன நேர்ந்தது என்பதை நான் உங்களுக்கு கூற விரும் புகிறேன்'' என்றார். அவர், "இந்நாட்களில் அவர்கள் இந்தியாவிலிருந்து ஜனங்களை அவர்களுடைய படிப்பிற்காக அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்'' என்றார். மேலும், "எங்களுடைய பள்ளியில் அங்கு ஒரு அருமையான இந்தியப் பையன் வந்தி ருந்தான். அவன் தன்னுடைய படிப்பையும் முடித்து விட்டிருந்தான். அவன் திரும்பிச் சென்றபோது ........'' என்றார். நான் நினைக் கிறேன், அவன் மின் ஆற்றலுக்குரிய

பொறியாளர் அல்லது ஏதோ ஒன்றாய் இருந்திருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். அவர், "ஆனால் நாங்கள் ........'' என்றார்.

20. சகோதரன் ஓரல் ராபர்ட்ஸ் அங்கே ஒரு பள்ளியை வைத்திருப்பதைப் போன்றே அவர்களும் வைத்திருந்தனர். அவர்கள் பொறியியல் மற்றும் என்ன வெல்லாமோ கற்பித்தனர்.

21. எனவே அவர், "திரும்பும் வழியில் நான் மற்றொரு ஊழியக்காரரோடு அவ னிடம் கூறினேன், இப்பொழுது இந்தியா விற்கு திரும்பிச் சென்று கொண்டிருக்கி றாயே....'' என்றாராம். இந்தியர்கள் முகமதுவை ஆராதிப்பதை நீங்கள் அறிவீர்கள். அவர், “நீ ஏன் உங்களுடைய மரித்துப் போன பண்டைய தீர்க்கதரிசியை மறந்துவிட்டு, உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக் கொள்ளக்கூடாது? உன்னுடைய ஜனங்களுக்குச் சொல்ல,

உன்னோடு ஒரு உண்மையான தேவனை இந்தியாவிற்கு திரும்ப எடுத்துச் செல்லக் கூடாதா?" என்று கேட்டாராம்.

22. அவன், "ஐயா" என்றானாம். அவன், "என்னுடைய தீர்க்கதரிசி செய்யக் கூடியதைக் காட்டிலும் உங்களுடைய கர்த்தராகிய இயேசு எனக்காக என்ன செய்யக்கூடும்?'' என்று கேட்டானாம்.

23. அவர், "நல்லது, என்னுடைய கர்த்த ராகிய இயேசு உனக்கு நித்திய ஜீவனை அளிக்க முடியும். அது வார்த்தையில் உள்ள ஒரு வாக்குத்தத்தமாய் உள்ளது'' என்றாராம்.

24. அவன், "என்னுடைய தீர்க்கதரிசி முகமது அதே காரியத்தை தம்முடைய வார்த்தையில் வாக்களித்தார்'' என்றானாம்.

25. அவர், "நல்லது, நீங்கள் பாருங் கள்'' என்று கூறி, அவர், "என்னுடைய கர்த்தர் மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்

பப்பட்டிருக்கிறார். உங்கள் தீர்க்கதரிசி கல்லறையில் இருக்கிறாரே'' என்றாராம்.

26. அவன் , ''அவர் மரித்தோரிலிருந்து எழுந்து விட்டாரரா?'' என்று கூறி, "நீங்கள் அதை இரண்டாயிரம் ஆண்டுகளாக நிரூபிப்பதாக கூறி வருகிறீர்கள், ஆனால் அதைக் குறித்து உலகத்தில் எண்பது சதவீதம் கூட கேள்விப்படவில்லையே'' என்றானாம். மேலும் அவன், "முகமது மரித்தோரிலிருந்து எழும்பட்டும், அப்பொழுது அதை முழு உலகமும் இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள்ளேயே அறிந்து கொள்ளும்'' என்றானாம்.

27. இப்பொழுது, அவர், "நல்லது, கவனி'' என்று கூறி, அவர், "இயேசு மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டிருக்கிறார்'' என்றாராம். மேலும், அந்த கிறிஸ்தவர், "நான் அதை நிரூபிக்க முடியும், ஏனென்றால் அவர் என்னுடைய இருதயத்திற்குள் ஜீவிக்கிறார்'' என்றானாம்.

28. அந்த முகமதியனோ, “ஐயா முகமதுவும் என் இருதயத்தில் ஜீவிக் கிறார்” என்றானாம்.

அவர், "ஆனால் நீ பார், நாங்கள் வல்லமையையும், சந்தோஷத்தையும் பெற் றுள்ளோம்” என்றாராம்.

29. அவன், "ஐயா முகமதிய மார்க்க மும் கிறிஸ்தவ மார்க்கத்தைப் போன்றே மனோதத்துவத்தை தோற்றுவிக்க முடியும்'' என்றானாம். அது உண்மை.

30. அவர்கள் வீதியில் படுத்துக் கொண்டு, “அல்லா” என்று சத்தமிடுவதை யும் நான் கண்டிருக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு நிலைமைக்குள்ளாகும்போது, அவர்க ளால் முடிந்தளவு .......... ஒரு மனிதன் ஒரு பட்டயத்தை தன்னுடைய இருதயத்திற்கு கீழே ஊடுருவிடும்படி குத்திக் கொள் வதையும், பின்னர் ஒரு மருத்துவர் அங்கு எழும்பி நின்று அதனூடாக தண்ணீரை ஊற்ற அது வெளியே வருவதையும்,

பின்னர் அந்த பட்டயம் வெளி யே இழுக்கப்பட, அது அவனை ஒன்றுமே காயப்படுத்தாததை நானும் பில்லியும் நின்று கவனித்தோம். பாருங்கள், அவர்கள் மரச்சிராய்வுகளை (Splinters) எடுத்துக் கொண்டு, தங்களுடைய விரல் நகங் களுக்கு கீழே எடுத்து அவைகளை சொருகிக் கொள்வதையும், தங்களுடைய மூக்கினூடாக சொருகி மாட்டிக்கொள்வ தையும், அது எந்த உணர்வையும் ஏற்படுத்தாமலும், அல்லது ஒரு சொட்டு இரத்தக்கசிவும் உண்டாகாமல் உள்ளது. கிறிஸ்தவ மார்க்கத்தைக் காட்டிலும் அவர்கள் அதிகமான மனோதத்துவத்தை தோற்றுவிக்க முடியும்.

31. திரு.ரீட்ஹெட் என்னிடம் கூறினார், அதாவது, “நான் ஏதோ ஒன்றுமறிந்திராத பையனிடம் பேசிக்கொண்டிருக்கவில்லை என்பதை அறிந்து கொண்டேன்” என்றார்.

அவன், "முகமதியர்களாகிய நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம்” என்றானாம்.

32. அவர்கள் நம் முடைய தீரமான சகோதரர் பில்லிகிரஹாமிற்கு செய்தது போன்றேயுள்ளது, நீங்கள் அதை செய்தித்தாளில் வாசித்திருப்பீர்கள். அந்த முகமதியன் திரு.கிரஹாமிடம் வந்தபோது, "நீர் சுகவீனமாயிருக்கிற முப்பது ஜனங் களை எடுத்துக் கொள்ளும், நானும் சுகவீனமாயுள்ள முப்பது ஜனங்களை எடுத்துக் கொள்வேன்; நீர் உம்முடைய முப்பது பேரை சுகப்படுத்தும், நான் முகமதுவினால் என்னுடைய முப்பது பேரை சுகப்படுத்துவேன்'' என்றானாம், பாருங்கள், திரு. கிரஹாம் காட்சியிலிருந்து ஓடிவிட்டார். அவர் அவனுக்கு பதில் அளிக்கவில்லை .

33. நான் அதை செய்திருப்பேன் என்று நான் நம்பவில்லை. ஆனால் நான் எபி ரேயப் பிள்ளைகளைப் போல, ''எங்கள்

தேவன் எங்களை இதிலிருந்து விடுவிக்க வல்லவராயிருக்கிறார்'' என்று இருந்திருப் பேன். ஏன் அவர் ஓரல் ராபட்ஸையோ அல்லது வேறு யாரையோ அழைத் தனுப்பியிருக்கக்கூடாது? அவர் அதை விசுவாசியாதிருந்தால், அதை விசுவாசித்த யாரையாவது அழைத்து அனுப்பியிருக்க லாம். ஆனால், நீங்கள் பாருங்கள், ஸ்தா பனங்களால், ஓ, அவர்கள் அப்பொழுதே அவரை வெளியே வீசிவிடுவர். அவர் செய்வதற்கான ஒரு வேலை உண்டு.

34. எப்படியாயினும், அப்பொழுது அவன், "நாங்கள் இந்தியாவில் இருக்கும் பொழுது, பாருங்கள் நீங்கள் - கிறிஸ்த வர்களாகிய நீங்கள் இயேசுவானவர் நீங்கள் செய்வதாகக் கூறினதைச் செய் யுங்கள்'' என்று கூறி, மேலும்,

"அப்பொழுதே நாங்கள் உம்மை விசுவாசிப்போம்'' என்றானாம். அவன், “அவர் மரித்தோரிலிருந்து எழுந்ததாக

அவர் கூறினார், எனவே அவர் செய்த அதே கிரியைகளை நீங்கள் செய்யும் காரணத்தால் ஜனங்கள் அதை அறிந்து கொள்வார்கள்'' என்றானாம்.

"நல்லது'' அவர், "நாங்கள் பெரிய கிரியைகளைச் செய்கிறோம்'' என்றாராம்.

35. அவன், "நான் 'பெரிய' கிரியை களை என்று ஒருபோதும் கூறவில்லை. முதலில் அவர் செய்த கிரியைகளையே நான் சற்று காண விரும்புகிறேன்'' என்றா னாம். ஏன்? நீங்கள் பேசும் பொழுது, நீங்கள் ஏதோ மூலையில் உள்ள சிறு நபரிடம் பேசிக்கொண்டிருக்கவில்லை என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் ஒருவரிடத்தில் பேசுகிற பொழுது உங்களுடைய வேத சாஸ்திரத்தையே பேசுகிறீர்கள். எனவே அவன், "அவர் செய்த கிரியைகளை நாங்கள் காண விரும்புகிறோம்'' என்றான்.

அவர், "ஓ", "ஒருவேளை நீர் மாற்கு 16ஐ குறிப்பிட்டு கொண்டிருக்கிறாயா?'' என்று கேட்டாராம்.

36. அவன், "ஆம் ஐயா. அது அவைகளில் ஒன்றாயிற்றே. சபைக்கான அவருடைய கடைசி கட்டளையாயிற்றே'' என்றானாம்.

37. அவர், "நல்லது, இப்பொழுது நீங்கள் பாருங்கள்'' என்று கூறி, "அநேக ஜனங்கள் அந்த அதிகாரத்தை மூட மதாபிமானமாக விசுவாசிக்கின்றனர்'' என்றாராம். மேலும் அவர், "ஆனால் நாங்கள் அந்த மாற்கு 16ம் அதிகாரத்தில் 9 வது வசனத்திலிருந்து இருப்பவையெல் லாம் உண்மையிலேயே ஆவியினால் ஏவப்படவில்லை என்பதை சிறந்த வேதப் பண்டிதர்களைக் கொண்டு பள்ளிகளில் கற்றறிந்து கொண்டோம்'' என்றாராம்.

38. அவன், “திரு.ரெட்ஹெட் அவர் களே அது ஏனோ!'' என்றானாம். அவன்,

"அப்படியானால் எந்தப் பகுதிதான் ஆவியினால் ஏவப்பட்டிருக்கிறது?'' என்று கேட்டானாம். மேலும் அவன், “ஒருக்கால் அதில் எஞ்சியவைகளும் ஆவியில் ஏவப் படாதிருக்கலாம். ஆனால் குரான் முழு வதுமே ஆவியினால் ஏவப்பட்டுள்ளது. நீங்கள் வேதாகமம் என்றழைக்கப்படுவ தில் எந்தவிதமான ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்றா னாம்.

39. அவர், "நான் வந்து உன்னிடம் பேசவிருக்கிறேன் என்று என் இருதயத்தில் தீர்மானம் செய்திருக்கிறேன். ஆம், நான் உன்னிடம் பேசப் போவதாக இருக்கி றேன்'' என்றாராம்.

40. அங்குதான் காரியம். இது ஆவி யினால் ஏவப்படவில்லையானால், அப் பொழுது அதன் எஞ்சியுள்ளதைக் குறித்தது என்ன?

41. அது சிக்காகோவில் உள்ள ஒரு பெண்மணியையே எனக்கு நினைப்பூட்டு கிறது. அவளுடைய பையன் ஒரு ஊழியக்காரனாக இருப்பதற்காக பயில் ஏதோ ஒரு வேதாகம பள்ளிக்கு, வேத பாடசாலைக்கு, ஒரு வேத பாடசாலைக்கு தூரமாய் சென்று விட்டிருந்தான். அவன் தொலைவில் இருந்தபோது, அந்த வயோதிப தாயாருக்கு உண்மையிலே மிகவும் மோசமான சுகவீனம் ஏற்பட்டு விட்டது. எனவே அவர்கள் இப்படிப்பட்ட ஒரு கடுமையான காய்ச்சலோடு உள்ள அவனுடைய தாயாரின் அருகில் இருக்கும்படியாக அந்தப் பையனுக்கு தகவல் அனுப்பினர். அவளுக்கு சீத சன்னியாய் இருந்தது. எனவே அது ஒரு அவசர அழைப்பாய் கூறப்பட்டிருக்கலாம். எனவே அந்தப் பையன் தன்னுடைய ஆடைகளை எடுத்துக் கொண்டு ஆயத்த மானான். முடிவாக அடுத்த நாள், ஆனால் அந்த இரவு முழுவதுமே அவன் ஒரு

செய்தியும் கேள்விப்படவேயில்லை, ஆனால் அடுத்த நாள், "எல்லாம் குண மடைந்து விட்டது'' என்று கூறப்பட்டது.

42. ஆகையால் ஏறக்குறைய ஒரு வருடம் கழித்து, அவன் ஏதோ ஒரு பெரிய வேத பள்ளியின் போதனையோடு கிழக்கில் உள்ள பாடசாலையிலிருந்து திரும்பி வந்தான். அவன் வீட்டிற்கு வந்தான், அவன் தன்னுடைய விலையேறப் பெற்ற தாயை வாழ்த்திவிட்டு, அவன் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்த பிறகு, அவன், "அம்மா, உங்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை கேட்டறிந்து கொள்ள எனக்கு தருணமே கிடைக்கவில்லை '' என்றான். மேலும், "ஓர் இரவு அவர்கள் என்னிடம் தங்கள் அருகில் இருக்க வேண்டும் என்று கூறிவிட்டு, அடுத்த நாள் காலை நீங்கள் சுகமாயிருக்கிறீர்கள் என்று கூறினர்" என் றான். எனவே, "மருத்துவர் எந்த மருந்தை உபயோகித்தார்?'' என்று கேட்டான்.

அதற்கு, "தேனே, மருத்துவர் ஒன்றை யுமே உபயோகிக்கவில்லை'' என்றாள்.

அவன், "நல்லது, உங்களுக்கு அது எப்படி சுகமானது?'' என்று கேட்டான்.

43. "அங்கே நூறு அடி சதுர இடத்திலே அந்த கரண வளைவில் இருக்கும் ...... அந்த சிறு ஊழியக்குழுவைத்தான் உனக் குத் தெரியுமே" என்றாள்.

“ஆம்”

44. "அங்கு ஒரு பெண்மணி இருந்தாள். ஓர் இரவு இந்த சிறிய குழுவில் இருந்த அந்த ஏழ்மையான, தாழ்மையான கூட்ட ஜனங்கள், அங்கே அவர்கள் ஒரு ஜெபக்கூட்டத்தை நடத்திக் கொண்டிருந் தனர்'' என்றாள். மேலும் தொடர்ந்து, "அவர்களில் ஒருவர் ஆவியினால் ஏவப்பட்டு இங்கு வந்து என்னைக் கண்டார். பின்னர் இரண்டு ஸ்திரீகள் வந்து, அவர்கள் எனக்காக எண்ணெய் பூசி ஜெபிக்க தங்களுடைய போதகரை

அழைத்து வரலாமா என்று அவர்கள் என்னிடம் கேட்டனர்'' என்று கூறி, "தங்களுடைய கரங்களை என்மீது வைக்க, நான் சுகமடைவேன் என்றும் கூறினார்'' என்றாள். எனவே, "உனக்குத் தெரியுமா, நானோ 'நிச்சயமாய் அழைத்து வாருங்கள்' என்றே கூறினேன். அவர்கள் போதகரை அழைத்து வர, அவர் தன்னுடைய கரங்களை என்மேல் வைத்து ஜெபித்தார்'' என்றாள். மேலும் "தேனே, அவர் வேதத்திலிருந்து மாற்கு 16-ம் அதிகாரத்தில், 'விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன' என்பதை வாசித்தார்'' என்றாள். அடுத்தபடியாக, " என்னவென்று உனக்குத் தெரியுமா? அடுத்த நாள் காலை வைத்தியரே மிகவும் குழப்பமடைந்து விட்டார், என்ன செய்வதென்றே தெரியாமற்போயிற்று. எனக்கு காய்ச்சலே இல்லாமற்போயிற்று" என்றாள்.

45. "ஓ" அவன், ''அம்மா, நீ அந்த குழுவுடன் தொடர்பு கொண்டிருந்திருக்கக் கூடாது, ஆனாலும் நீ தொடர்பு வைத்து விட்டாயா?'' என்றான். அவன் தொடர்ந்து, "பாருங்கள்" என்று கூறி, நாங்கள் பள்ளியில் இருந்தபோது, மாற்கு 16-ம் அதிகாரத்தில் 9வது வசனத்திலிருந்து ஆவியினால் ஏவப்படவில்லை என்பதை நாங்கள் கற்றறிந்து கொண்டோம்'' என் றான்.


அவளோ, “தேவனுக்கு மகிமை!'' என்றாள்

46. "ஏன்?" அவன், "அம்மா, நீங்கள் அந்த ஜனங்களைப் போல செயல்பட ஆரம்பித்துவிட்டீர்கள்'' என்றான்.

47. அவள், "நான் ஏதோ காரியத்தை அப்படியே சிந்தித்துக் கொண்டிருந்தேன்'' என்றாள். மேலும், “நான் வேதாகமம் முழுவதையும் வாசித்துக் கொண்டு வருகிறேன், அதில் மற்ற இடங்களில்

உள்ள மற்ற வாக்குத்தத்தங்களும் கூட அதற்கு ஒத்ததாகவே உள்ளது'' என்றாள். அவள் தொடர்ந்து, ''ஆவியினால் ஏவப்படாததைக் கொண்டு தேவனால் என்னைக் குணப்படுத்த முடிந்ததென்றால், உண்மையிலேயே ஆவியினால் ஏவப் பட்டதைக் கொண்டு அவர் என்ன செய் வார் என்றே நான் சிந்தித்துக் கொண் டிருந்தேன்" என்றாள். அது உண்மை.

48. எனக்கு அது முழுவதுமே ஆவியில் ஏவப்பட்டதாகும். தேவனே, அதை விசுவாசிக்கும்படி எனக்கு விசுவா சத்தைத் தந்து அதை உறுதிப்படுத்தி யருளுமே!


ஆனால் அது யாருடைய குழந்தை
என்று மரியாள் அறிந்திருந்தாள்.
அவள் கவலைப்படாமல் சென்று
கொண்டிருந்தாள்
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: 62-12-23 வார்த்தையின் நிமித்தம் வரும் நிந்தை

196 மரியாள் கிணற்றுக்குப் போகும் வழியில் இருந்தாள். ஏறக்குறைய, பதி னேழு அல்லது பதினெட்டு வயதுடைய சிறு கன்னிகை. முன்பு மணம் புரிந்து நான்கு பிள்ளைகள் இருந்த ஒரு மனி தனை, வயதில் அதிகம் மூத்தவனை விவாகம் செய்கிறாள். அவள் அவள் அவனை நேசித்தாள், ஏனென்று அவ னுக்கு தெரியவில்லை. இதோ அவர்கள் இருந்தனர். அவள் தண்ணீர்மொள்ள கிணற்றுக்குச் செல்லும் வழியில் அவள் வேத வாக்கியங்களை மனதில் சிந்தனை செய்து கொண்டு சென்றாள் என்பதில் ஐயமில்லை. அப்பொழுது அவளுக்கு முன்பாக ஒரு ஒளி பிரகாசித்தது. அந்த

ஒளி பிரகாசித்தபோது, அங்கே தேவதூதன் ஒருவன் அவளுக்கு முன்பாக நின்றான்.

197 மரியாள், தான் எவ்வளவு சிறியவள் என்று உணர்த்திருப்பாள் என்பதில் வியப்பில்லையே? அதைக் குறித்து நீங்கள் எப்பொழுதாவது யோசித்ததுண்டா? நேற்று நான் பயப்பட்டது போல அவளும் பயப்பட்டிருப்பாளோ என்று நான் வியக்கிறேன்.

198 "மரியாளே வாழ்க" வாழ்க என்றால் "நில்." "நான் இப்பொழுது சொல்லப் போவதற்கு உன் கவனத்தை செலுத்து. ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர் வதிக்கப்பட்டவள், நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய். நீ மனிதனை அறியாதிருந்தும் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய். உன் இனத்தாளாகிய எலிசபெத்தும் தன் முதிர் வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பத்தரித்திருக்கிறாள். இந்த

அடையாளங்கள் நிச்சயம் நிறைவேறும்" என்றான்.

அவள், "இது எப்படியாகும்? புருஷனை அறியேனே" என்றாள்.

199 அவன் "பரிசுத்த ஆவி உன் மேல் நிழலிடும். உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்" என்றான்.

200 பரியாசக்காரர் என்ன வேண்டுமானாலும் கூறட்டும். அவள் அதை அறிந்திருந்தாள். அது நிறைவேறும் என்பதை அவன் அறிந்து கொண்டான். ஏனெனில் தேவன் அவ்வாறு உரைத்தார்.

201 பிரதிஷ்டையின் நாளின் போது, அல்லது குழந்தைக்கு விருத்தசேதனம் செய்ய வேண்டிய நாள் வந்த போது, அவள் குழந்தையை இப்படி கையிலேந்தி நடந்து சென்று கொண்டிருந்தபோது,

அவள் எப்படி உணர்ந்திருக்க வேண்டும். அப்பொழுது மற்ற ஸ்திரீகள் அவளிட மிருந்து விலகி தூரம் சென்றனர். அவர்கள் தங்கள் குழந்தைகளைப் பிரதிஷ்டை செய்து விருத்த சேதனம் செய்வதற்கென அழகிய சித்திர தையலாடைகளால் குழந்தைகளை உடுத்தியிருந்தனர். அவர் கள் எல்லாருமே சுத்திகரிப்புக்காக ஆட்டுக் குட்டிகளை கொண்டு வந்திருந்தனர். இவளோ தன் சுத்திகரிப்புக்காக இரண்டு காட்டுப்புறாக்களை கொண்டு வந்தாள். அவள் தன் குழந்தையை காளையின் கழுத்திலிருந்த நுகத்தடியில் சுற்றப்பட் டிருந்த துணியை எடுத்து அதைக் கொண்டு சுற்றினாள். குழந்தை தொழுவத்திலிருந்த அந்த துணியால் தான் சுற்றப்பட்டது. அவர்கள் மிகவும் தரித்திரராயிருந்தனர். எனவே அவருக்கு ஒன்றுமே இருக்க வில்லை. அதோ அவள் நின்றாள்

202 மற்ற ஸ்திரீகள் அனைவரும் இந்த சிறு கன்னிகையை விட்டு விலகி தூரம் போய் நின்றனர் என்பதில் ஐயமில்லை. அவர்கள், "பாருங்கள். அவள் முறை தவறிப் பிறந்த குழந்தையை வைத்திருக் கிறாள்" என்றனர். தேவன் எவ்வாறு காரியங்களை தீவிரமுள்ளதாக காணப் பண்ணுகிறார் என்று பாருங்கள். ஓ, என்னே! அவர் சாத்தானின் கண்களை முற்றிலுமாக மறைத்து விடுகிறார். "எவ்வளவு அசுத்தமானது! எவ்வளவு அழுக்கானது! விபச்சாரம்! அப்படித்தான் அவள் இருக்கிறாள், அவள் ஒரு விபச்சாரி" என்று கூறும்படி செய்கிறார். ஆனால் அது மரியாளின் இருதயத்தில் எந்த ஒரு துடிப்பையும் நிறுத்தவில்லை. அவர்கள் அவரிடமிருந்து தூரம் விலகி யிருந்தனர்.

203 இன்றைக்கும் அவர்கள் அதையே செய்கின்றனர், அது “பரிசுத்த உருளை அல்லது மதவெறியன் அல்லது ஏதோ ஒன்று என்று இப்பொழுது அவரை அழைக்கின்றனர்.

ஆனால் அது யாருடைய குழந்தை என்று மரியாள் அறிந்திருந்தாள். அவள் கவலைப்படாமல் சென்று கொண்டிருந் தாள்.

204 ஆனால், ஓ, அறையில் பின்னால் உட்கார்ந்து கொண்டிருந்த சிமியோனை அவர்கள் கவனித்திருக்க வேண்டும் அல்லவா? அவனுக்கு வாக்குத்தத்தம் அளிக்கப்பட்டிருந்தது. அவன், "கர்த்தர் எனக்குப் பிரத்தியட்சமானார்" என்றான். மேலும் அவன், “நான் மரணமடைய... மாட்டேன்" என்றான். அப்பொழுது அவ னுக்கு எண்பது வயது. அவருடைய இரட் சண்யத்தை என் கண்கள் காணுமட்டும்

நான் மரணமடையமாட்டேன் என்றுரைத்தார் என்று தீர்க்கதரிசனம் உரைத்துக் கொண்டேயிருந்தான்.

205 "ஓ சிமியோனே, உனக்கு வயதாகி விட்டது. உங்களுடைய உங்களுடைய அந்த கிழவனுக்கு மூளைக் கோளாறு ஏற்பட்டு விட்டது என்பது உங்களுக்குத் தெரியும், அவன் ஒரு சிறிய... அவனை தனியே விட்டு விடுங்கள். அவன் ஊறுவிளைக்காதவன். அவன் யாருக்கும் தீங்கு விளைவிக்கமாட்டான்" என்றனர்.

206 ஆனால் சிமியோனுக்கோ கர்த்தருடைய வார்த்தை உண்டானது. அவன், "தேவனுடைய ஆவி என்மேல் இறங்கினதை நான் கண்டேன். நான் நின்று கொண்டு அவரைப் பார்த்தேன். அவர் என்னிடம், சிமியோனே, நீ இதுவரைக்கும் நீதிமானாய் இருந்து வந்திருக்கிறாய். நீ அதுவரைக்கும் மரிப்பதில்லை. உன்னை

நான் அங்கே சாட்சியாக்கப் போகிறேன்' என்றார்” என்றான். உ-ஊ. அவ்வளவு தான். “கர்த்தாவே, அதற்காக நீர் என்ன செய்யப் போகிறீர்?"

“அது என் வேலை."

207 அந்நாளிலே அவன் அவர்கள் மேல் அக்கினித்தழலைக் குவிக்க முடியும் என்பதே என் கருத்து. "உங்களுக்கு ஒரு சாட்சி இருந்ததே! அதற்கு ஏன் செவி கொடுக்கவில்லை" என்று அவன் கேட்பார்.

208 பிறகு பார்வை இழந்த அன்னாள் தேவாலயத்தில் உட்கார்ந்து ஜெபம் செய்து கொண்டிருந்தாள். கர்த்தர் அவளுக்கு "சிமியோன் கூறுவது உண்மை " என்று வெளிப்படுத்தியிருந்தார். ஆமென்! அவ ளுக்கு பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் தெரியவில்லை. இருப்பினும் இன்று பார்வை நன்றாக உள்ளவர்கள் காண்பதை

விட அவளால் வெகு தூரத்தில் காண முடிந்தது. மேசியாவின் வருகை சமீபமா யுள்ளது என்பதை அவள் ஆவியில் கண்டாள். ஆவியானவர் அவளுடைய இருதயத்தில் அசைந்தார்.

209 அது எவ்வளவு சிறிய சபையா யிருந்தது என்று பார்த்தீர்களா? சகரியா, எலிசபெத், மரியாள், யோவான், அன்னாள், சிமியோன். இலட்சக்கணக்கான வர்களில் ஆறுபேர் மாத்திரமே! நோவா வின் காலத்தில் இருந்தது போல இவர்கள் சொற்ப பேர், ஆறுபேர் மாத்திரம். தேவன் அவர்கள் ஒவ்வொருவருடனும் தொடர்பு கொண்டார். அவர்கள் இசைவாயிருந்தனர். அவர்கள் ஒன்று சேர்ந்திருந்தனர். ஆமென்.

210 இதோ முதிர் வயதுள்ள சிமியோன். இதோ குழந்தை கொண்டு வரப்படுகிறது. குழந்தை தேவாலயத்துக்கு கொண்டு வரப்படுகிறது என்று அவன் ஒரு

போதும் கேள்விப்படவேயில்லை. இதோ அந்தக் குழந்தை அங்குள்ளது. சிமியோன் தன்னுடைய அறையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். ஆவியானவர் அவன் மேல் இறங்கி, "சிமியோனே, வெளியே போ" என்கிறார்.

211 அவன் எங்கு சென்று கொண் டிருக்கிறான் என்பதை அறியாமலேயே அவன் நடந்து சென்றான். ஆபிரகாமைப் போல், அவன் ஏதோ ஒன்றை தேடிக் கொண்டிருந்தான். அது எங்குள்ளது என்று அவனுக்குத் தெரியவில்லை. ஆயினும் அவன் நடந்து கொண்டிருந்தான். சிறிது நேரம் கழித்து அவன் நின்றான். அப் பொழுது பரிசுத்த ஆவியானவர் அவ னிடம், "அதோ அவர்" என்று கூறியிருக்க வேண்டும்.

212 அவன் மரியாளின் கரங்களி லிருந்த குழந்தையை தன் கையிலெடுத்து

அண்ணாந்து பார்த்து, "கர்த்தாவே, உமது அடியேனை இப்பொழுது சமானத்தோடே போகவிடும். உம்முடைய இரட்சண்யத்தை என் கண்கள் பார்த்துக் கொண்டிருக்கிறது" என்றான். எல்லோரும் ஏளனம் செய்து கொண்டிருந்ததை, ஸ்திரீகள் உதறித் தள்ளிக்கொண்டிருந்ததை, சிமியோன், கர்த்தாவே, அது உம்முடைய இரசண்யம்" என்றான்.


213 ஏறக்குறைய அதே நேரத்தில் பார்வை இழந்த ஒரு வயோதிக ஸ்திரீ கூட்டத்தினரின் மத்தியில் தள்ளாடிக் கொண்டு சுற்றி இங்கு வருகிறாள், அவ ளும் கூட அவரிடத்தில் வந்து தீர்க்க தரிசனம் உரைத்தாள். ஏனென்றால் அவள் அவருக்காக காத்துக்கொண்டிருந்தாள். அவன் மரியாளிடம், "உன் ஆத்துமாவை ஒரு பட்டயம் உருவிப் போகும். ஆனால் அநேகருடைய இருதய சிந்தனைகள்

வெளிப்படும்" என்றாள். புரிகிறதா? அது என்னவாயிருந்தது?

214 இப்பொழுது, அங்கிருந்த சில பெண்கள், "இப்பொழுது அதைப் பார்! அது என்ன விதமான தரம் என்று நீ பார்த்தாயா? அங்குதான் காரியம். பார்த்தீர்களா? அது தான் இது. அது எங்கே உள்ளது என்று பார்? அந்த கிழவனுக்கு பைத்தியம் பிடித்திருக்கிறது. அவன் அந்த வேசிப்பெண்ணுக்கு முன்பாக நின்று கொண்டு என்ன வெல்லாமோ கூற முயற்சிக்கிறானே! அங்குதான் காரியம். பார்த்தீர்களா? அது முறை தவறிப் பிறந்த குழந்தை! அந்த கிழவி அன்னாள் அங்கு உட்கார்ந்து கொண்டு பட்டினி கிடந்து தன்னை அந்தவிதமாக சாகடித்துக் கொள்கிறாள். அவளுக்கு நம்மைப் போல எந்த பொழுது போக்கும் கிடையாது. ஆனால் அங்குதான் காரியம் பாருங்கள்.

அவள் தேசத்திலுள்ள எல்லா சங்கங்களிலும் உறுப்பினராயிருக்கலாம். அவள் ஒரு நல்ல குடும்பத்திலிருந்து வந்தவள், பாருங்கள், அவள் அங்கே அதைச் சார்ந்திருக்கக் கூடும். ஆனால் அவள் இங்கே இருக்கிறாள். அந்தக் கூட்டம் எப்படி ஒன்றாக சேர்ந்து கொள்கிறதென்று பார்த்தீர்களா? ஓ, ஆம். ஆமென்!

215 இன்றைக்கும் அதுவே சம்பவிக்கிறது. "நாம் பரிசுத்த ஆவியால் உயர்த்தப்பட்டு கிறிஸ்து இயேசுவுடன் உன்னதங்களில் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம்.” நிச்சயமாக. ஆம். ஐயா.


ஒருமுறை நீங்கள் சத்தியத்தை
கேட்க நேர்ந்தால், அதை ஏற்றுக்
கொள்ள வேண்டும், அல்லது
புறக்கணிக்க வேண்டும். வேறு
வழியேயில்லை.... ஆம், ஐயா!
இரண்டில் ஒன்றை நீங்கள் செய்ய
வேண்டும்...
சகோ.வில்லியம் பிரன்ஹாம்
அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 63-11-24M கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?

172. எபிரெயர் 13:8 மறுபடியுமாக அவரை உங்கள் கரங்களில் வைத்து விட்டது (சகோ. பிரன்ஹாம் பிரசங்க பீடத்தை மூன்று தடவை தட்டுகிறார் - ஆசி)... தப்பிக்க முடியாது! அவர் முழுவதுமாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கி றார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். உங்களால் தப்பிக்க முடியாது. அவரை நீங்கள் வேறொரு காலத்துக்கு தள்ளி விட முடியாது. எபிரெயர் 13:8 உங்கள் சிந்தனைகளைக் குற்றப்படுத்தி, அவரை மறுபடியும் உங்கள் கரங்களில் சேர்க்கிறது. எனவே இயேசு பிலாத்துவின் கரங்களில்

இருந்தது போல, இப்பொழுது உங்கள் கரங்களில் இருக்கிறார்.

பாருங்கள், "எனக்குத் தெரியாது'' என்று நீங்கள் கூறலாம். அப்படியானால், ஏன் இதைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?

173. பிலாத்து ஒரு அஞ்ஞானி , அவன் மனைவியும் ஒரு அஞ்ஞானி. ஆனால் தேவன் அதை நீதியுள்ளதாகச் செய்ய, அந்த ஸ்திரீயைக் கொண்டு தகவல் அனுப்பச்செய்தார். அவள் "இந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம். அவர் நிமித்தம் இன்றைக்கு...'' (அது காலை, அவள் முந்தின இரவில் பாடுபட்டாள். இருபத்து நான்கு மணி நேரம் ஒரு நாளாக கணக்கிடப் படுகிறது) 'அந்த நீதிமானின் நிமித்தம் இரவில் சொப்பனத்தில் வெகுவாய் பாடுபட்டேன்.

அவரை ஒன்றும் செய்ய வேண்டாம்'' என்று ஆளனுப்பித் தெரிவித்தாள்.

174. பிலாத்து, ''நல்லது, அப்படியானால் என் கைகளைக் கழுவி அவரை உதறி விடுகிறேன்'' என்றான். அவனால் அப்படி செய்ய முடியவில்லை .

நீங்களும் அப்படி செய்ய முடியாது. ஒருமுறை நீங்கள் சத்தியத்தை கேட்க நேர்ந்தால், அதை ஏற்றுக் கொள்ள வேண்டும், அல்லது புறக்கணிக்க வேண்டும். வேறு வழியேயில்லை.... ஆம், ஐயா! இரண்டில் ஒன்றை நீங்கள் செய்ய வேண்டும்... கர்த்தருடைய எச்சரிக்கை!

175. யூதர்கள், "அவனுடைய இரத்தப் பழி எங்கள் தலையின் மேல் இருக்கட்டும். நாங்கள் எங்கள் ஆசாரியரை, எங்கள் ஸ்தாபன முறைமையை விசுவாசிப்

போமேயன்றி இவனை விசுவாசிக்க மாட்டோம்” என்று கூச்சலிட்டனர்.

பார்த்தீர்களா? இன்றைய வகுப்பினரைப் பாருங்கள்! ஆனால் எல்லோருமே தேவனுடைய விஷயத்தை சந்திக்க வேண்டும். நீங்கள் எல்லோருமே - நீங்கள் அஞ்ஞானிகளாயிருந்தாலும் யாராயிருந்தாலும், அவிசுவாசியாயிருந்தாலும், மெதோடிஸ்டு, பாப்டிஸ்டு, பிரஸ்பிடேரியன், வெதுவெதுப்பானவன், குளிர்ந்த நிலையிலுள்ளவன், அனலுள்ளவன் யாராயிருந்தாலும் - நீங்கள் விரும்பினாலும் விரும்பாமல் போனாலும் அந்த விஷயத்தை எப்படியும் சந்திக்க வேண்டும். அது உங்கள் கரங்களில் உள்ளது. நிச்சயமாக.



நான் வானொலியிலும் தொலைகாட்சியிலும் பிரசங்கிப்பதில்லை, அப்படி செய்தால், ஜனங்களிடம் பணத்துக்காக யாசிக்க வேண்டிவரும். அப்படி என்னால் செய்ய முடியாது. நான் உங்கள் சகோதரனாயிருக்க விரும்புகிறேன். தேவன் என்னை எங்கு அனுப்புகிறாரோ, அங்கு செல்ல விரும்புகிறேன். அங்கு ஐந்து பேர் இருந்தாலும், அங்கு செல்ல விரும்புகிறேன். அங்கு பத்து லட்சம் பேர் இருந்தாலும், அங்கு செல்ல விரும்புகிறேன். நான் செல்வதற்கு தேவன் ஒரு வழியை உண்டு பண்ணுவார். அவ்வளவுதான். விசுவாச வாழ்க்கையை நான் வாழ்கிறேன். நாம் எல்லோருமே அதைத்தான் செய்யவேண்டும்.

செய்தி: **62-06-03 கடைசிக் கால சுவிசேஷபணி**

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



**நீங்கள் எறும்பிடமிருந்து ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று வேதம் உரைக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். அவர்கள் வேலை செய்யாவிட்டால், சாப்பிடக் கூடாது. எனவே அது முற்றிலும் உண்மை.**



செய்தி: **64-08-23 M கேள்விகளும் பதில்களும் COD #19**

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



பார், என் அருமை சகோதரனே, உன் தந்தையை நீ கவனித்துக் கொண்டால் பாக்கியவானாயிருப்பாய், ஏனெனில் உன்னை கவனித்துக் கொள்ள முடியாத நிலையில் நீ இருந்த போது, உன் தந்தை உன்னை கவனித்துக் கொண்டார். முதலாம் கற்பனை ஒரு வாக்குத்தத்தத்தைக் கொண்டுள்ளது: "பூமியில் உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு – கர்த்தர் நீடித்த நாட்களை உனக்குக் கொடுப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக". பார்? உன்னால் முடிந்த எந்த விதத்திலாவது உன் தந்தைக்கு உதவியாயிரு. அவர் மிகச் சிறந்ததைப் பெற்றுக் கொள்கின்றாரா என்பதைப் பார்த்துக் கொள்.



செய்தி: 64-08-23 M
கேள்விகளும் பதில்களும் COD #19

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



# கழுகின் சத்தம்

## டிசம்பர் 11, 2023

1

